DECEMBER 2022 **U/ID 30616/ULA1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. நிலமகளின் முகமாகத் திகழ்வது யாவை?

2. தமிழ்மொழி எம்மொழிகளைத் தோற்றுவித்தது? எழுதுக.

3. கவிமணி தில்லைப்பதியத்தில் கண்டவைகள் யாவை?

4. சேவகன் கேட்ட கூலி எத்தகையது? விளக்குக.

5. பாரதிதாசன் குரங்கின் செயல்களாகக் கூறியவற்றைக் கூறுக.

6. நா. காமராசர் பூத்த உயிர்க் கல்லறைகள் என யாரைக் குறிப்பிடுகிறார்? விளக்குக.

7. ஈரோடு தமிழன்பனின் கவிதையில் மகாத்துமாவின் பார்வை பற்றி எழுதுக.

8. மு.மேத்தா நம்பிக்கை பற்றி கூறியவற்றை எழுதுக.

9. குலசேகராழ்வாரின் இறைப்பணிகளைத் தருக.

10. சிவபெருமானின் அருள் வண்ணம் எத்தகையது? எழுதுக.

11. நந்தி மறவரிடம் பெண் கேட்போரை எவ்வாறு தண்டிப்பார்?

12. சேரனைக் கண்டு காதல் கொண்ட பெண்ணின் நிலை யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. தமிழாகியத் தெய்வப் பெண் எவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளது? விளக்குக.

14. கவிமணி கோவிலில் எவ்வற்றையெல்லாம் காணவில்லை என்கிறார்? விளக்குக.

15. சேவகனாக கண்ணன் வந்து செய்த வேலைகள் யாவை? எடுத்துரைக்க.

16. பாரதிதாசன் ஆலமரத்தை எவ்வாறு வருணித்துள்ளார்? விளக்கியுரைக்க.

17. காகிதப்பூக்கள் எனும் கவிதையில் திருநங்கைகளின் வாழ்வியலை எவ்வாறு கூறப்பட்டுள்ளது? விளக்குக.

18. குலசேகராழ்வார் கண்ணனின் குழந்தைப் பருவங்களாகக் கூறியவற்றை எடுத்துரைக்க.

19. நந்திக் கலம்பகத்தில் தலைவன் நெஞ்சோடு புலம்பியதைக் கூறுக?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. சுந்தரம் பிள்ளையின் தமிழ்த் தெய்வ வணக்கப்பாடலின் கருத்துகளை ஆராய்க.

21. சேவகன் படும் துயரங்களாகப் பாரதியார் கூறியவற்றைத் தொகுத்துரைக்க.

22. கோவில் வழிபாட்டின் போது கவிமணி கண்டவற்றை விளக்கியுரைக்க.

23. ஈரோடு தமிழன்பன் கவிதையில் வெளிப்படும் சமுதாயக் கருத்துக்கள் யாவை? அவற்றைத் தொகுத்துரைக்க.

24. நந்திக் கலம்பகத்தில் தலைவி கார்ப்பருவம் கண்டு புலம்புவதை விவரித்து எழுதுக.

———————